Canada Border Services Agency
Agence des services frontaliers du Canada

# குடிவரவு, அகதி பாதுகாப்பு சட்டத்துக்கமைய தடுத்துவைக்கப் பட்டவர்களுக்கு பயன்படும் தகவல்

PROTECTION • SERVICE • INTEGRITY

Canada

© கனடாவின் முடியாட்சியாளராக விளங்கும் மாட்சிமைதங்கிய அரசியாரின் பிரதிநிதியாகிய பொது பாதுகாப்பு மற்றும் அவசர தயார்நிலை அமைச்சர், 2015

விபரநிரல் இலக்கம் :PS38-49/2015Ta-PDF ISBN 978-0-662-03903-7
இந்த ஆவணம் கனடா எல்லை சேவை முகமையகத்தின் www.cbsa-asfc.gc.ca இணையதளத்தில் கிடைக்கும்.

நீங்கள் வேண்டிக்கொண்டால், இந்த ஆவணம் மாற்று வடிவங்களில் கிடைக்கும்.

Also available in English under the title: Information for People Detained Under the *Immigration and Refugee Protection Act*

Aussi offert en français sous le titre : Renseignements à l'intention des personnes détenues en vertu de la *Loi sur l'immigration et la protection des réfugiés*

இது கிடைக்கும் வேறு மொழிகள்: அறபு, இலகு சீனம், மரபு சீனம், இந்தி, யப்பானியம், கொரியம், பார்சி, போர்த்துக்கேயம், பஞ்சாபி, இரசியம், இஸ்பானியம், தகலொக்கு, உருது.

இது ஒரு சட்ட ஆவணமல்ல. சட்டபூர்வமான தகவல்களுக்கு, *குடிவரவு - அகதி பாதுகாப்பு சட்டம்* (*Immigration and Refugee Protection Act/Loi sur l'immigration et la protection des réfugiés)* மற்றும் ஒழுங்குவிதிகளைப் பார்க்கவும்.

உங்கள் உரிமைகள், கடப்பாடுகள், உங்களைத் தடுத்துவைத்த காரணங்கள் பற்றிய முக்கிய தகவல்களையும், நீங்கள் தடுப்புக்காவலில் இருக்கும்பொழுது உங்களுக்கு உதவக்கூடிய பொதுவான தகவல்களையும் இந்த ஆவணம் உங்களுக்கு வழங்குகிறது. உங்கள் தடுப்புக்காவல் அல்லது இந்த ஆவணத்தில் காணப்படும் தகவல்கள் குறித்து நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால், கனடா எல்லை சேவைகள் முகமை (Canada Border Services Agency (CBSA/Agence des services frontaliers du Canada [ASFC]) அதிகாரி ஒருவரிடம் பேச விரும்புவதாகத் தெரிவிக்கவும்.

## சட்டம்

நீங்கள் *கனடா குடிவரவு-அகதி பாதுகாப்பு சட்டத்துக்கமைய* தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளீர்கள். அதற்கான காரணம்: CBSA/ASFC அதிகாரி ஒருவர்:

- ஒரு பரிசீலனையை பூர்த்தி செய்வது அவசியம் என்று கருதினார்;
- உங்கள் அடையாளம் அவருக்கு திருப்தி அளிக்கவில்லை;
- உங்களை கனடாவுக்குள் அனுமதிக்கவியலாது என்றும், நீங்கள் பொதுமக்களுக்கு ஆபத்தானவர் என்றும், ஒரு பரிசீலனைக்கு அல்லது அனுமதிவாய்ப்பு விசாரணைக்கு அல்லது கனடாவிலிருந்து அகற்றப்படுவதற்கு அல்லது அகற்றல் கட்டளைக்கு இட்டுச்செல்லும் விசாரணைக்கு நீங்கள் தோற்றும் வாய்ப்பு இல்லை (தப்பியோடும் சாத்தியம் உண்டு) என்றும் அவர் கருதக் காரணம் இருந்தது; அல்லது
- பாதுகாப்பு காரணங்களுக்காகவோ, மனித உரிமைகளை அல்லது சர்வதேச உரிமைகளை மீறியதற்காகவோ, கடுங்குற்றச் செயற்பாடு, குற்றச்செயற்பாடு அல்லது கூட்டுக் குற்றச்செயற்பாட்டுக்காகவோ உங்களை கனடாவிற்குள் அனுமதிக்க இயலாது என்று அவர் சந்தேகிக்க காரணம் இருந்தது.

## தடுத்து வைக்கப்பட்டவர்களை நடத்தும் விதம் தொடர்பான கொள்கை

## தடுத்து வைக்கப்பட்டவர்களை நடத்தும் விதம்

- எல்லா வேளைகளிலும் நீங்கள் கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடத்தப்படுவீர்கள்
- உங்கள் சட்டபூர்வமான உரிமைகள் குறித்து உங்களிடம் தெரிவிக்கப்படும். உங்கள் உரிமைகளைக் கையாள உங்களுக்கு வாய்ப்பளிக்கப்படும். உங்கள் வழக்கின் நிலை குறித்து உங்களிடம் தெரிவிக்கப்படும்.

**எல்லா வேளைகளிலும் நீங்கள் கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடத்தப்படுவீர்கள்**

## சிறுவர்கள்

- வேறு வழி எதுவும் இல்லை என்றால் மட்டுமே 18 வயதுக்கு குறைவான சிறுவர்களை CBSA/ASFC தடுத்து வைக்கும். உங்களுக்கு பிள்ளைகள் இருந்தால், உங்கள் சொந்த வழக்கு விவரங்களின் அடிப்படையில் அவர்களின் நன்னலன்களை CBSA/ASFC கவனமாக கருத்தில் கொள்ளும். உங்கள் குடும்பத்தவர்களை ஒழுங்குசெய்வது உட்பட சிறுவர்களைப் பராமரிப்பதற்கான மாற்றொழுங்குகள், உங்கள் தடுப்புக்காவல் நீடிக்கக்கூடிய காலப்பகுதி, உங்கள் பிள்ளைகளுக்கு ஏற்ற இடவசதியும் சேவைகளும் கிடைக்கும் வாய்ப்பு போன்ற காரணிகளை CBSA/ASFC அதிகாரி கணிப்பிடுவார்.
- CBSA/ASFC குடிவரவு தடுப்பு நிலையம் ஒன்றில் உங்களுடன் உங்கள் பிள்ளைகள் தங்கியிருப்பது அவர்களின் நலன்களுக்குச் சிறந்தது என்றால், அவர்கள் அதற்கு அனுமதிக்கப்படுவார்கள். அந்த நிலையத்தில் குடும்பங்களுக்கு புறம்பான வசிப்பிடம் உண்டு. அங்கு நீங்கள் தங்கியிருக்கும் காலப்பகுதியைப் பொறுத்து, உங்கள் பிள்ளைகளுக்கு ஓர் ஆசிரியர் கிடைப்பார்.
- மாகாண அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளப்படலாம். உங்கள் பிள்ளை, மாகாண சிறுவர் நல சேவையகத்தின் பராமரிப்பிலும் இடப்படலாம். இடப்பட்டால், உங்கள் பிள்ளை உங்களை வந்து சந்திப்பதற்கு ஒழுங்கு செய்யப்படலாம்.

## தடுப்புக்காவல் வசதிகள்

- முதலில் நீங்கள் CBSA/ASFC அலுவலகம், அல்லது நுழைவுதுறை ஒன்றில் (தரை அல்லது கடல் எல்லைக் கடவை, விமான நிலையம் போன்றவற்றில்) தடுத்து வைக்கப்படலாம்.
- அதன் பின்னர் நீங்கள் CBSA/ASFC குடிவரவு தடுப்பு நிலையம் ஒன்றில் (லெவால், கியூபெக்; டொரன்டோ, ஒன்டாரியோ; வான்கூவர், பிரிட்டிஷ் கொலம்பியா) அல்லது ஒரு மாகாண மறியல் நிலையத்தில் தடுத்து வைக்கப்படலாம். எத்தகைய நிலையங்கள் கிடைக்கின்றன, அங்கே நீங்கள் உங்களுக்கு அல்லது பிறருக்கு எவ்வளவு ஆபத்தை அல்லது அதற்கான சாத்தியத்தை ஏற்படுத்தக்கூடியவர் என்று CBSA/ASFC கருதுகிறதோ, அதை வைத்தே நீங்கள் எங்கே தடுத்து வைக்கப்படுவீர்ர்கள் என்பது தீர்மானிக்கப்படும்.
- CBSA/ASFC மையங்களில் ஆண்கள், பெண்கள், குடும்பங்கள் தங்க இயலும். சில வேளைகளில் ஒரு குடும்பம் தடுத்து வைக்கப்பட்டால், பிள்ளைகள் ஒரு பெற்றாருடன் புறம்பான பிரிவில் இடப்படலாம். குடும்பத்தவர்கள் தங்கியிருக்கும் காலத்தில் ஒருவரை ஒருவர் சந்திக்க ஒழுங்கு செய்யப்படும்.
- பத்திரமான, பாதுகாப்பான சூழ்நிலையில் நீங்கள் தடுத்து வைக்கப்படுவதை உறுதி செய்வது CBSA/ASFC யின் பொறுப்பு.
- உங்கள் அந்தரங்கம் மதிக்கப்படும்
- உங்கள் உடல், உணர்வு, ஆன்மீகம் சார்ந்த தேவைகளை உங்கள் பண்பாட்டுக்கு ஏற்ப நிறைவேற்ற நியாயமான முயற்சி எடுக்கப்படும்.
- தடுப்புக்காவல் நிலைமைகள் பற்றிய உங்கள் கருத்துரைகளை CBSA/ASFC வரவேற்கிறது

**உங்கள் அந்தரங்கம் மதிக்கப்படும்**

## உங்கள் உரிமைகள்

- உங்களுக்கு அருகதை இருந்தால், உங்கள் சொந்தச் செலவில் ஒரு சட்டவுரைஞரை உங்கள் பிரதிநிதியாக அமர்த்திக்கொள்ளும் உரிமை அல்லது சட்ட உதவிக்கொடை பெறும் உரிமை உங்களுக்கு உள்ளது. உங்களுக்கு கிடைக்கும் சட்ட உதவிக்கொடைச் சேவைகள் குறித்து தேவையான தகவல்கள் உங்களுக்கு வழங்கப்படும். உங்கள் பிரதிநிதியாக ஒரு நண்பரையோ, ஓர் அமைப்பின் அல்லது சங்கத்தின் உறுப்பினரையோ நீங்கள் நியமிக்கலாம்.

உங்களுக்கு அருகதை இருந்தால், உங்கள் சொந்தச் செலவில் ஒரு சட்டவுரைஞரை உங்கள் பிரதிநிதியாக அமர்த்திக்கொள்ளும் உரிமை அல்லது சட்ட உதவிக்கொடை பெறும் உரிமை உங்களுக்கு உள்ளது.

- உங்களை தடுத்துவைத்த காரணத்தை அறிந்துக்கொள்ளும் உரிமை உங்களுக்கு உள்ளது.
- உங்கள் தூதரகத்தை அல்லது உங்கள் நாட்டின் தூதரக பிரதிநிதி ஒருவரை உங்கள் வேண்டுகோளின் பேரில் தொடர்புகொள்ளும் உரிமை உங்களுக்கு உள்ளது.
- உங்கள் தூதரக பிரதிநிதி ஒருவருடன் தொடர்புக்கொள்ளப்படுவதை நீங்கள் விரும்பவில்லை என்றால், உங்களைத் தடுத்துவைத்த தகவலை கனடாவில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையர் (United Nations High Commissioner for Refugees / Haut-Commissariat des Nations Unies pour les réfugiés) அலுவலகத்திடம் தெரிவிக்கும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளலாம்.
- நடபடிக்கைகள் (தடுப்புக்காவல் மீள்நோக்குகள், குடிவரவு விசாரணைகள் போன்றவை) நடைபெறும் மொழி உங்களுக்குப் புரியவில்லை அல்லது உங்களால் அம்மொழியில் பேச முடியாது என்றால், ஒரு மொழிப்பெயர்ப்பாளரின் உதவியைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு.
- நீங்கள் 18 வயதுக்கு குறைவான இளவல் என்றால் அல்லது குடிவரவு – அகதிச் சபைக்குரிய (Immigration and Refugee Board [IRB] / Commission de l'immigration et du statut de réfugié [CISR]) குடிவரவுப் பகுதியினது அபிப்பிராயத்தின்படி இந்நடபடிக்கைகளின் தன்மையைப் புரிந்துக்கொள்ளும் ஆற்றல் அற்றவர் என்றால், இந்நடபடிக்கைகளில் உங்களுக்கு வழிகாட்டி உதவ ஒரு குறிக்கப்பட்ட பிரதிநிதி அமர்த்தப்படலாம்.

உங்கள் தூதரகத்தை அல்லது உங்கள் நாட்டின் தூதரக பிரதிநிதி ஒருவரை உங்கள் வேண்டுகோளின் பேரில் தொடர்புகொள்ளும் உரிமை உங்களுக்கு உள்ளது.

# பொதுவான தகவல்கள்

## சமூக உதவி

உள்ளூர் சமூக அல்லது சமய அமைப்புகள் போன்ற அரசு சாரா அமைப்புகளின் உறுப்பினர்கள் உங்களை வந்து சந்தித்து உதவலாம். உங்களுக்குப் பயன்படும் தகவல்களை அவர்கள் உங்களுக்கு வழங்கலாம். நீங்கள் விரும்பினால், உங்கள் நாட்டைச் சேர்ந்தவர்களுடன் அல்லது உங்கள் மொழியைப் பேசுவோருடன் உங்களைத் தொடர்புபடுத்த அவர்கள் முயலலாம். அத்தகைய சேவைகள் எல்லா மையங்களிலும் கிடைக்காமல் போகலாம். நீங்கள் CBSA/ASFC அதிகாரிகளிடம் தகவலும் உதவியும் கேட்கலாம். மேற்படி அமைப்புகளின் பட்டியல் ஒன்றை அவர்களால் வழங்க முடியும்.

## மருத்துவ உதவி

நீங்கள் எப்பொழுதாவது (உடலளவிலோ உள்ளத்தளவிலோ) சுகவீனப்பட்டு, மருத்துவரைப் பார்க்க வேண்டியிருந்தால், உடனடியாக நிலையப் பணியாளர்களிடம் அதனைத் தெரிவிக்கவும். நீங்கள் ஏதாவது மருந்து உட்கொள்பவர் என்றால் அல்லது உங்களக்கு (உடலளவிலோ உள்ளத்தளவிலோ) சுகவீனம் இருந்தால், உங்களை இந்நிலையத்தில் அனுமதிக்கும் பொழுதே பணியாளர்களிடம் அதனைத் தெரிவிக்கவும். மருத்துவரால் உங்கள் மருந்துவகை பரிசீலிக்கப்படும். மருத்துவர் அறிவுறுத்தியவாறு உங்களுக்கு மருந்து கொடுக்கப்படும்.

## பயணப்பொதிகள், கைவச உடைமைகள்

நீங்கள் வந்தடையும் பொழுது உங்கள் கைத்தொலைபேசி, பயணப்பொதிகள், நகைகள், பணம், மருந்துவகை உட்பட உங்கள் கைவசம் உள்ள பொருட்கள் மற்றும் நீங்கள் வைத்திருக்கும் ஏனைய பொருட்கள் அனைத்தையும் பத்திரப்படுத்தி வைத்திருப்பதற்காக பாதுகாப்பு அதிகாரிகளிடம் நீங்கள் கொடுக்க வேண்டியிருக்கும். பாதுகாப்பு அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்து உங்கள் பொருட்களை நீங்கள் நியாயமானளவு கையாளலாம். கத்திகள் போன்ற ஆபத்தான பொருட்கள், ஆயுதங்களாகப் பயன்படுத்தக்கூடிய பொருட்கள், ஆட்களின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய பொருட்கள் அகற்றப்பட்டு, ஒழிக்கப்படும்.

## உணவு

மருத்துவ, பல்நல, அல்லது வேறு காரணங்களுக்காக உங்களுக்கு விசேட உணவு தேவைப்பட்டால், CBSA/ASFC அதிகாரியிடம் அல்லது காவலரிடம் அல்லது நிலையத்தில் உள்ள வேறொருவரிடம் தெரிவிக்கவும். உங்கள் உணவுத் தேவைகளை நிறைவேற்ற விசேட ஒழுங்கு செய்யலாம்.

## சந்திப்பவர்கள்

- ஒவ்வொரு நிலையத்துக்கும் உரிய விதிகளைப் பொறுத்து சந்திக்கும் நேரங்களும், சந்திக்க அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் வேறுபடலாம்.
- சந்திக்கும் பகுதியில் மாத்திரமே சந்திப்பு இடம்பெறும்
- நிலையத்தின் வழமையான சந்திப்பு நேரங்களில் சட்டவுரைஞர் அல்லது நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சந்திக்க அனுமதிக்கப்படுவார். மேற்படி சந்திப்பு நேரங்களுக்குப் பின்னர் நிலைய முகாமையின் அனுமதியுடன் மாத்திரமே சந்திக்க அனுமதிக்கப்படும். அவர்களின் முடிபு உங்கள் வழக்கு விபரங்களைப் பொறுத்தது.
- சந்திக்கும் பகுதி இல்லாத நிலையங்களில் சட்டவுரைஞர்களுக்கும், தூதக அதிகாரிகளுக்கும் மாத்திரமே விசேட ஒழுங்கு செய்யப்படும்.

## தொலைபேசி

குறிப்பிட்ட இடங்களிலும் நேரங்களிலும் உள்ளூர் தொலைபேசி அழைப்புகளை நீங்கள் செய்துகொள்ளலாம். கிடைக்கும் தொலைபேசிகளை பலர் பயன்படுத்த விரும்பினால், உங்கள் நேரம் மட்டுப்படுத்தப்படலாம். தொலைபேசி பயன்படுத்த உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், நிலையப் பணியாளர்களின் உதவியை நாடவும். நீங்கள் சர்வதேச தொலைபேசி அழைப்பு மேற்கொள்ள வேண்டியிருந்தால், அறிவுறுத்துரைகளுக்கு உள்ளூர் அதிகாரி ஒருவருடன் கதைக்கவும்.

## கடிதங்கள்

- சில நிலையங்களில் நீங்கள் கடிதம் அனுப்பவும் பெறவும் அனுமதிக்கப்படுவீர்கள்.
- நீங்கள் அனுப்பும் கடிதங்களும் பெறும் கடிதங்களும் பிரித்துப் பார்க்கப்படலாம்.
- அனுப்பப்படும் கடிதங்களும், நீதிமன்றங்களிலிருந்து அல்லது உங்கள் சட்டவுரைஞரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கடிதங்களும் உங்கள் முன்னிலையில் மாத்திரமே திறந்து பார்க்கப்படும்.

## முறைப்பாடுகள்

உங்கள் தடுப்புக்காவல் அம்சம் எதைப் பற்றியும் ஒரு CBSA/ASFC அதிகாரியுடன் நீங்கள் கதைக்க விரும்பினால், நிலையக் காவலர் ஒருவரிடம் அல்லது வேறொரு பணியாளரிடம் தெரிவிக்கவும். CBSA/ASFC அதிகாரி இயன்றளவு விரைவாக உங்கள் முறைப்பாட்டை ஆராய்வார்.

## போக்குவரத்து

உங்களை ஏற்றிச்செல்லும்பொழுது அல்லது இந்நிலையத்துக்கு வெளியே இடம்பெறும் நடபடிக்கை எதற்கும் நீங்கள் தோற்றும்பொழுது CBSA/ASFC அல்லது பாதுகாப்பு அதிகாரி உங்களைச் சோதனையிடுவார். அவர் உங்களுக்கு விலங்கிடலாம். மாற்றுத்திறனாளிகள், முதியோர், இளம் பிள்ளைகள், கர்ப்பிணிகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படலாம்.

**உங்கள் தடுப்புக்காவல் அம்சம் எதைப் பற்றியும் ஒரு CBSA/ASFC அதிகாரியுடன் நீங்கள் கதைக்க விரும்பினால், நிலையக் காவலர் ஒருவரிடம் அல்லது வேறொரு பணியாளரிடம் தெரிவிக்கவும்.**

## தீப்பற்றினால்

உங்களுக்கு எப்பொழுதாவது புகை மணத்தால் அல்லது நீங்கள் தீப்பற்றக் கண்டால், உடனடியாகப் பணியாளர்களிடம் தெரிவிக்கவும். உங்கள் அறையில் தீப்பற்றினால், உடனடியாக கடமையாற்றும் காவலர்களிடம் தெரிவிக்கவும். நீங்கள் கட்டிடத்தை விட்டுப் பத்திரமாக வெளியேறும் வண்ணம் அமைதி காத்து, காவலர்கள் அறிவுறுத்தியவாறு செயற்படவும்.

## பிற தகவல்கள்

ஒவ்வொரு நிலையத்தின் விதிகளும் எல்லோரையும் பத்திரமாகப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டவை. அவ்விதிகளை நீங்கள் பின்பற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உடைமைகளுக்கு சேதம் விளைவிப்பது உட்பட சீர்குலைப்பு நடத்தை சகிக்கப்படமாட்டாது. அவ்வித நடத்தையின் பெறுபேறாக நீங்கள் தனிமைப்படுத்தப்படலாம் அல்லது இன்னும் பாதுகாப்பான தடுப்புக்காவல் நிலையத்துக்கு மாற்றப்படலாம்.

உங்கள் வழக்கை நடத்துவதற்காக சில தகவல்களை உறுதிப்படுத்தும்படியும் CBSA/ASFC அதிகாரிகள் உங்களைக் கேட்கலாம்.

நீங்கள் வேறு ஏதாவது கேட்டறிய விரும்பினால், நிலயைப் பணியாளர் அல்லது CBSA/ASFC அதிகாரி ஒருவரிடம் கேட்கவும்.

## தடுப்புக்காவல் தொடரல் அல்லது விடுவித்தல் முடிபுகள்

### "குறிக்கப்படாத" வரவுகளுக்கான தடுப்புக்காவல் மீள்நோக்கு

தொடர்ந்து தடுத்து வைத்திருக்க காரணம் இல்லை என்று அல்லது பிணை செலுத்தி பிரச்சனையை தணிக்கலாம் என்று CBSA/ASFC அதிகாரி ஒருவர் கருதினால், முதலாவது தடுப்புக்காவல் மீள்நோக்கிற்கு முன்னரே நீங்கள் விடுதலை செய்யப்படலாம்.

- **நாற்பத்தி எட்டு (48) மணித்தியாலங்களுக்குள் (அல்லது அதற்கு பிறகு இயன்றளவு விரைவாக),** குடிவரவு-அகதி சபையின் குடிவரவுப் பகுதி உங்கள் தடுப்புக்காவலை மீள்நோக்கும். குடிவரவுப் பகுதியைச் சேர்ந்த தீர்மானிப்பாளர் ("உறுப்பினர்") CBSA/ASFCஐ சாராது சுதந்திரமாகச் செயற்படுபவர்.
- **ஏழு (7) நாட்கள் -** நீங்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டால், அடுத்த ஏழு நாட்களுக்குள் IRB/CISR உங்கள் வழக்கை மீள்நோக்கும்.
- **முப்பது (30) நாட்களுக்கு ஒரு தடவை -** ஏழு நாள் மீள்நோக்கின் பின்னர் குறைந்தது 30 நாட்களுக்கு ஒரு தடவையாவது IRB/CISR உங்கள் வழக்கை மீள்நோக்கும்.
- ஒவ்வொரு மீள்நோக்கிற்கும் நீங்கள் சமுகமளிக்க வேண்டும்
- உங்களுக்கு ஒரு சட்டவுரைஞர் அல்லது குறிக்கப்பட்ட பிரதிநிதி இருந்தால், உங்கள் குடிவரவு நடபடிக்கைகள் அனைத்துக்கும் அவர் வருகை தருவதற்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளும்படி விதந்துரைக்கிறோம்.
- புதிய விவரங்களின் அடிப்படையில் உங்கள் வழக்கை முன்கூட்டியே மீள்நோக்கும்படி வேண்டுகோள் விடுக்க நியாயம் இருந்தால், அவ்வாறு மீள்நோக்கும்படி உங்கள் அடுத்த மீள்நோக்கிற்கெனக் குறிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் எந்த வேளையிலும் நீங்கள் கேட்கலாம். அந்த வேண்டுகோள் எழுத்தில் IRB/CISR-ன் குடிவரவுப் பகுதிக்கு விடுக்கப்பட வேண்டும். உங்களை வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதை அவர்கள் தீர்மானிப்பார்கள். வேண்டுகோளின் பிரதி ஒன்று CBSA/ASFC-கு கொடுக்கப்பட வேண்டும்.

## தடுப்புக்காவலிலிருந்து விடுதலை

மீள்நோக்கின் பின்னர் IRB/CISR-ன் குடிவரவுப் பகுதி உறுப்பினர் ஒருவர், நீங்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட வேண்டும் அல்லது தடுப்புக் காவலிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிடுவார். உங்களை விடுதலை செய்வதற்கு IRB/CISR நிபந்தனைகள் விதிக்கலாம். அவற்றுள் பின்வருவன அடங்கலாம்:

- **ஒரு வைப்புத்தொகை:** தடுப்புக்காவலிலிருந்து விடுதலையாவதற்கான நிபந்தனைகளுக்கு நீங்கள் அமைந்தொழுகுவதை உறுதிப்படுத்துவதற்காக இப்பணத்தொகை செலுத்தப்படும். உங்கள் விடுதலைக்கான நிபந்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டால், உங்கள் வழக்கு முடிவடைந்து ஆறு முதல் எட்டு கிழமைகளுக்குள் வைப்புத்தொகை திருப்பிச் செலுத்தப்படுவது வழக்கம்.
- **ஓர் உத்தரவாதம்:** இதற்கு வைப்புத்தொகை எதுவும் தேவையில்லை. உங்கள் விடுதலைக்கான நிபந்தனைகளுக்கு நீங்கள் அமைந்தொழுகாவிட்டல், (கனடிய பிரசையாக அல்லது கனடாவில் நிரந்தர வாசியாக விளங்க வேண்டிய) உத்தரவாதி ஒரு பணத்தொகையைச் செலுத்துவதாக வாக்குறுதி அளிப்பார்.

உங்களுக்கு ஓர் உத்தரவாதி இருக்கிறார் என்றால், உங்கள் குடிவரவு வழக்கு முடிவடைய முன்னர், அவருடைய சட்டபூர்வமான கடப்பாடுகளிலிருந்து அவரை விடுவிக்கும் வழக்கம் இல்லை.

## நிபந்தனைகளை மீறுதல்:

உங்கள் விடுதலைக்கான நிபந்தனை எதற்கும் நீங்கள் அமைந்தொழுகத் தவறினால், உங்கள் உத்தரவாதி செலுத்திய அல்லது வாக்குறுதியளித்த பணத்தொகையை இழக்க நேரலாம். அத்துடன்/அல்லது நீங்கள் மீண்டும் தடுத்து வைக்கப்படலாம்.